கொரோனா நோய்த்தொற்று நெருக்கடிவேளையில்

## திருத்தந்தை பிரான்சிஸ் நமக்கு அளித்த சிறப்புச் செபம்

# அன்னை மரியாவை நோக்கி மன்றாட்டு

ஓ அன்னை மரியே! எம் பயணத்தில் மீட்பு மற்றும் நம்பிக்கையின்
அடையாளமாக நீர் எப்போதும் ஒளிர்கின்றீர்.
சிலுவை அடியில், இயேசுவின் துன்பத்தில் ஒன்றித்திருந்து,
உமது நம்பிக்கையில் நிலைத்திருந்தவரே!
நோயாளிகளின் ஆரோக்கியமே!
எங்களையே நாங்கள் உம்மிடம் ஒப்படைக்கின்றோம்.

அனைத்துலக மக்களின் அரணானவளே!
எம் தேவைகளை நீர் அறிந்திருக்கிறீர்;
அவற்றை நீர் எங்களுக்கு வழங்குவீர்
என்பதை நாங்கள் அறிந்திருக்கிறோம்.
ஆகையால், கலிலேயாவில் உள்ள
கானாவில் நடந்ததுபோல இந்தத்
துன்பக் காலத்திற்குப் பிறகு,
மகிழ்ச்சியும் கொண்டாட்டமும்
திரும்புவதற்கு உதவும்.



சிலுவையின் வழியாக,
உயிர்ப்பின் மகிழ்ச்சிக்கு
எம்மை வழிநடத்துவதற்கு
எம்முடைய துன்பத்தை
இயேசுவே தம்மேல் ஏற்றுக்கொண்டார்;
எம்முடைய துயரங்களை
அவர்தாமே சுமந்தார்.
தெய்வீக அன்பின் தாயே!
தந்தையின் திருவுளத்திற்கு நாங்கள் இணங்கிடவும்,
இயேசு எமக்குச் சொல்வதைச் செய்திடவும்
எமக்கு உதவும். ஆமென்.

ஓ! இறைவனின் புனித அன்னையே!
உம்முடைய பாதுகாவலில் நாங்கள் தஞ்சம் அடைகிறோம்.
ஓ! மகிமைமிகு புனித கன்னியே! எம்முடைய தேவைகளில்
எம்முடைய விண்ணப்பங்களைப் புறக்கணியாமல்
ஒவ்வொர் ஆபத்திலிருந்தும் எப்போதும் எம்மை விடுவித்தருளும்.

(தமிழாக்கம்: குடந்தை ஞானி, நம்வாழ்வு – ஆசிரியர்)

www.namvazhvu.in
நம் வாழ்வு
ஒரே கிறிஸ்தவ வார இதழ்
ஆண்டுச் சந்தா ரூ.500